(உ) கோயிலின் எந்தப் பகுதியையும், தகுந்த அதிகாரியின் அனுமதியின்றி புகைப்படம் எடுக்கக் கூடாது.

இதற்குத் தகுந்தவாறு விதிகள் மாற்றியமைக்கப்படும் என்று அறிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, அரசினர் மசோதாக்கள்.

(5) தகவல் கோரல். வேப்பேரி பகுதியில் மாவோவின் படங்கள் விநியோகம் செய்யப்பட்டது குறித்து.

Thiru P. G. KARUTHIRUMAN: I want to put only one question since this is the last day.

நேற்று வேப்பேரிப் பகுதியிலே மாவோவின் போஸ்டர்கள் விநியோகிக்கப்பட்டதாகத் தகவல் வந்தது. நான் எனக்குத் தகவல் கிடைத்தவுடன் விஜிலன்ஸுக்குத் தெரிவித்தேன். அதைப்பற்றி முதலமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதைப்பற்றி வந்தவுடனே எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் என்னிடத்திலே கூறியிருப்பார்களானால் நான் விவரங்களைப் பெற்றிருப்பேன். மாவோவின் விளம்பரம் ஆங்காங்கு கொஞ்சம் முளைவிட்டு வருகிறது. இன்னும் சொல்லப்போனால் கொஞ்சம் வளரவும் செய்கிறது. ஆனால் இந்த அரசு நிச்சயம் மிகுந்த கண்காணிப்போடு இருக்கும். இந்த மன்றத்திலே உள்ள எந்தக் கட்சிக்காரர்களும் அவர்களுக்கு உடன்பட்டவர்கள் அல்ல, நக்சல்பாரிகளுக்கு. இந்த மன்றத்திலே உள்ள எல்லாக் கட்சியினரும் அவர்கள் விஷயத்திலே மிகுந்த ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களால் நாட்டுக்கும் சமுதாயத்திற்கும் இருக்கிற ஆபத்தை உணர்ந்து வன்முறைச் செயல்கள் மூலம் நாட்டுக்குக் கேடு ஏற்பட்டுவிடாமல் இந்த விஷயத்தில் இந்த அரசோடும், அரசுக் காவல் துறையோடும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

6. தன்னிலை விளக்கம்: தன் சொத்து விவரக் கணக்கில் செய்ய வேண்டிய திருத்தம் குறித்து திரு.கே. விநாயகம் அவர்களின் தன்னிலை விளக்கம்.

THIRU K. VINAYAKAM : I rise on a point of personal explanation. I have submitted a statement of my assets and liabilities. There is a slight mistake. It has crept in there. I am now terribly afraid of this House. The Memebers are so vigilant. This is the way in which we should function and I am very proud of our Members including the Governing Body and those in Opposition. In page 3, I have described that I have raised a loan from Purasawalkam Fund to the extent of of Rs. 35,000 on a property of my wife. It is Rs. 35,000 that I asked when I submitted this assets and liabilities. But they granted only Rs. 30,000 and not Rs. 35,000. That may be corrected in my statement.

திரு. பி. ஜி. கருத்திருமன் : எங்களுடைய உறுப்பினருடைய நேர்மை எப்படியிருக்கிறது என்பதைக் கனம் சபாநாயகர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சா. மெய்யப்பன்: கனம் சபாநாயகர் அவர்கள் தீர்ப்புகள் சொல்வதிலே ஆங்கிலத்திலே சொன்னார்கள். தமிழிலே இருந்தால் நல்லது. உரிமைக் குழுவிற்கு விடுவதைப்பற்றித் தீர்ப்புகள் கொடுக்கும்பொழுது ஆங்கிலத்தில் கொடுத்தார்கள். ஆங்கிலத்தில் சொல்வதால் கேட்பதற்கு நன்றாக இல்லை. எனவே தமிழிலே சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.